# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதிய***

**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.11.29 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## மோசடிகளைத் தடுத்தல் (திருத்தம்)

## (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம்

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விலை: ரூபா 8.00** **தபாற்செலவு : ரூபா 50.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

*வாசகம் 2* இவ்வாசகம், (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கைமாற்றல் உறுதியொன்றின் நிறைவேற்றம் தொடர்பில் போலியாவணம் புனைதலைத் தடுப்பதனை வசதிப்படுத்தக்கூடிய நடவடிக்கை முறையொன்றுக்கு ஏற்பாடு செய்வதாகும்.

ச.வ.ஓ 8/2023

**(70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

1. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்

2. (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- — 70 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவை, (1) ஆம் உட்பிரிவாக மீள் இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(2) கைமாற்றல் உறுதியொன்று தொடர்பில் -

(அ) கைமாற்றுநர் மற்றும் கைமாற்றம் பெறுநர் ஆகிய இருவரும் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப் பட்டவாறாக அவர்களின் கையொப்பங்களையும் பெரு விரலடையாளங்களையும் இடுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், கை மாற்றம் பெறுநர் சமுகமளிப் பதற்கும் மற்றும் உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுவதற்கும்

இயலாதவராக இருக்கின்றவிடத்து, அவர், அத்தகைய உறுதியில் அல்லது சாதனத்தில் அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கென வேறெவரேனும் ஆளுக்கு எழுத்தில் அதிகாரமளித்தல் வேண்டும்; அவ்வாள் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்:

ஆயின் மேலும், கைமாற்றம் பெறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிப்பாளர் சபை சமுகமளிப்பதற்கும் மற்றும் உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுவதற்கும் இயலாததாக இருக்கின்றவிடத்தும், அத்தகைய சபையானது, அத்தகைய உறுதியில் அல்லது சாதனத்தில் அதன் சார்பில் கையொப்பமிடுவதற்கென வேறெவரேனும் ஆளுக்கு எழுத்தில் அதிகாரமளித்தல் வேண்டும்; அவ்வாள் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(ஆ) கைமாற்றம் பெறுநர் பராய மடையாதவொருவராக இருப்பின், பாதுகாவலர் இப்பிரிவின் நோக்கத்துக்காக கைமாற்றம் பெறுநர் சார்பில் செயலாற்று வதற்குத் தகுதிவாய்ந்த ஆளொரு வராக இருத்தல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.